# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013*, பெப்புருவரி மாதம் *22* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2013 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டம்

[2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்டி) 1/2012

**(301 ஆம் அத்தியாயமான) இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபைக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்திரெண்டாம் ஆண்டின் 59ஆம் இலக்க, இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபைக் கட்டளைச் சட்டத்தால் இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை கூட்டிணைக்கப்பட்டதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை தனது பெயரை இலங்கை அன்புச் சகோதரர் சபை என மாற்றுவதற்கு தற்போது விரும்புகின்றதாதலாலும் :

சொல்லப்பட்ட இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை தனது பெயரில் அத்தகைய மாற்றத்திற்கு பயன்கொடுப்பதற்கு சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கு தற்போது விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப் பத்தை அனுமதிப்பதற்கு அது தகுதியானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முறையே ''இலங்கை அன்புச் சகோதரர் சபை'' எனவும் ''அன்புச் சகோதரர் சபை'' எனவும் அறியப்பட வுள்ள ''இலங்கை புனித

**2.** (301 ஆம் அத்தியாயமான) இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை கட்டளைச் சட்டத்தில் (விரிவுப் பெயரைத் தவிர) (அப்பெயரினாலும் சரி அல்லது ''புனித சூசையப்பர் சகோதரர் சபை'' யின் குறும்பதத்தினாலாயினும் சரி) அல்லது (301 ஆம் அத்தியாயமான) இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில்,

2-PL 006395 -990 (2011/11)

*சூசையப்பர் சகோதரர் சபை" அத்துடன் "புனித சூசையப்பர் சகோதரர்".*

"இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை" எனக் குறிப்பிடப் படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி ''இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை'' என்னும் சொல்லமைப்பிற்கும் ''புனித சூசையப்பர் சகோதரர் சபை'' என்னும் சொல்லமைப்புக்கும் பதிலாக, "இலங்கை அன்புச் சகோதரர் சபை" என்ற சொற்களும் "இலங்கை அன்புச் சகோதரர்" என்னும் சொற்களும் இடப்படுதல் வேண்டும்.

*ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், வழக்குகள், மேன்முறையீடுகள், உரிமைகள், பொறுப்புகள் முதலியன தொடர்ந்திருத்தல்.*

**3.** (1) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் "இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபையால்" அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மையதுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கை களும், சான்றிதழ்களும் அல்லது வேறு சாசனங்களும் அல்லது ஆவணங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் ''இலங்கை அன்புச் சகோதரர் சபையால்'' அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்படவுள்ளதாக, வழங்கப்பட வுள்ளதாக அல்லது நிறைவேற்றப்படவுள்ளதாக அல்லது ஆக்கப்பட்டுள்ளதாக, வழங்கப்பட்டுள்ளதாக அல்லது நிறை வேற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை" அல்லது அதற்கெதிராக தொடரப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னராக முடிவுறாதிருப்பவையுமான எல்லாத் துடர்ச்சிகளும் வழக்குகளும் மேன்முறையீடுகளும் வேறு வழக்கு நடவடிக்கைகளும் தணிக்கப்படுதலோ அல்லது கைவிடப்படு தலோ ஆகாது என்பதுடன் "இலங்கை அன்புச் சகோதரர் சபை யால்''அல்லது அதற்கெதிராக தொடரவும்படலாம் அல்லது வலுவுக்கிடவும்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் உரிமைகளையும், பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் தவிர, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று ''இலங்கை

புனித சூசையப்பர் சகோதரர் சபையின்" எல்லா உரிமைகளும் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்" "இலங்கை அன்புச் சகோதரர் சபையின்" உரிமைகளாகவும் பொறுப்புகளாகவும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்